பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil D i y
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 17உ (2—8—67) புதன் ★ வெளியூர்: ஆடி 18உ (3—8—67) வியாழன் [இதழ்: 42

தமிழுக்கு சிறந்த எதிர்காலம் உருவாகிறது

திருக்குறளை மொழிபெயர்த்து உலகெங்கும் பரப்பும் பொறுப்பை ஐ. நா. ஏற்கும்

தமிழிலும் ஆங்கிலத்திலும் இணைந்த புலமை பெறக் கல்வி நிலையங்களில் பாடத் திட்டம்

கா. சு. பிள்ளை ஆராய்ச்சிமன்றத் துவக்க விழாவில் அமைச்சர் நெடுஞ்செழியன் அறிவிப்பு

சென்னை, ஆக. 1—

"தமிழ் நாட்டுக்குள் ஒரு தமிழன் மற்றொரு தமிழனுடன் பேச—ஒரு தமிழன் தனது எண்ணத்தை மற்றொருவருக்கு எடுத்துரைக்க—கடிதங்கள் எழுத முழுக்க முழுக்க தமிழ்தான் பயன்படவேண்டும் என்ற முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசின் எல்லாத் துறைகளிலும் எல்லா அதிகாரிகளும் தமிழையே பயன்படுத்த ஆவன செய்யப்பட்டு வருகிறது. இனி எதிர்காலத்தில் எந்த ஒரு குடிமகனும் அதிகாரிகளுக்கோ அரசுக்கோ எழுதும் கடிதங்கள் அனைத்தும் தமிழிலேயே இருக்கும்; 'ஆங்கிலத்தில்தான் எழுதவேண்டும்' என்ற நிலை அடியோடு மாற்றப்பட்டுவிடும்"

என்று, தமிழகக் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நேற்று கோகலே மண்டபத்தில் நடைபெற்ற கா. சுப்பிரமணிய பிள்ளை தமிழ் ஆராய்ச்சி மன்றத் துவக்க விழாவுக்குத் தலைமையேற்று உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

"திருக்குறளை, ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் மொழிபெயர்க்கும் பணியை ஐ. நா. பேரவையே ஏற்கவேண்டும்" என்று கோரி நேற்று சென்னையில் நடந்த 'யுனெஸ்கோ' கருத்தரங்கில் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்ட முன்னாள் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன், தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார், டாக்டர் இலட்சுமணசாமி உட்பட அனைவரும் இதனை ஒருமனதாக ஆதரித்ததாகவும் அமைச்சர் நெடுஞ்செழியன் அறிவித்தார்.

'தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற குறிக்கோளுடன் தமிழ் இலக்கியங்களை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்து வெளியிடும் பணியை மேற்கொள்ள பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளையின் பெயரால் இந்த ஆராய்ச்சி மன்றத்தை, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த விழாவினையொட்டி நூற்காட்சி ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது.

விழாவுக்கு வருகைபுரிந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசிய கழகச் செயலாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை, ஆராய்ச்சி மன்றத்தின் குறிக்கோளை விளக்கினார்.

செட்டிநாட்டரசர் திரு. எம். ஏ. முத்தையா செட்டியார், கா. சு. பிள்ளையின் உருவப் படத்தைச் திறந்துவைத்தார்.

தொழிலதிபர் பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம் மன்றத்தின் குறிக்கோள் பலகையைத் திறந்து வைத்தார்.

சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் திரு. கே. கே. பிள்ளை, சென்னை அரசினர் கலைக் கல்லூரி முதல்வர் திரு. மு. இராசாக்கண்ணனார், பச்சையப்பன் கல்லூரி பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், யோகி சுத்தானந்த பாரதியார் ஆகியோர் வாழ்த்துரை கூறுமுகத்தான் பல சிறந்த கருத்துக்களை வழங்கினர்.

தமிழ்ப் பெரும் புலவர்கள், பேராசிரியர்கள் பலரும் வந்து குழுமியிருந்தனர்.

துவக்கத்தில் ஔவை டி. கே. சண்முகம் இறை வணக்கம் பாடினார்.

அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் தமது முன்னுரையில் கா. சு. பிள்ளை அவர்களின் சிறப்பியல்புகள் குறித்தும், அவரிடம் தாம் மூன்றாண்டுக்கு மேலாக மாணவராக இருந்ததுடன், உடனிருந்து அவர் இடும் எழுத்துப் பணிகளைச் செய்து உதவிடும் வாய்ப்பினையும், நெருங்கிப் பழகிடும் பேற்றினையும் பெற்றிருந்தது குறித்தும் விளக்கினார்கள். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தமிழ் நாட்டிலேயே முதன் முதலாக எம்.எல். பட்டம் பெற்று—'தாகூர் சட்ட விரிவுரையாளர்' என்ற சிறப்பையும் பெற்றவரான திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையின் பெயரை, 'காசு பிள்ளை' என்றும், 'எம்.எல். பிள்ளை' என்றும் அழைப்பது வழக்கம். அவர், பெயரில்தான் 'காசு பிள்ளை'யாக இருந்தாரே தவிர, உண்மையில் காசு இல்லாத பிள்ளையாசத்தான் இறுதிக் காலத்தில் இருந்து இறந்தார்.

கடைசிக் காலத்தில் கையெழுத்துப் போடுவதற்கு இயலாத நிலையில் கை நடுக்கம் ஏற்பட்டு அந்த நிலையிலும் பேராசிரியராகப் பணியாற்றினர்.

சட்டத் துறைப் பேராசிரியராக இருந்துகொண்டே தாமாகத் தமிழைக் கற்று, யார் உதவியுமின்றி தாமே அதில் புலமை பெற்றுத் தமிழ்ப் பேராசிரியராகவும் இருந்தார். அவரைப் போன்ற ஆற்றல் படைத்தவர்களைத் தற்காலத்தில் காண்பது அரிது."

திரு. நெடுஞ்செழியன் அவர்கள் மேலும் பேசுகையில், ஒரு மூன்று செய்யுள்களின் நுண்ணிய பொருளை ஆராய்ந்து திரு. காசு பிள்ளை அவர்கள் எடுத்துரைத்ததை அழகாக விளக்கினார்.

பின்னுரையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"நமது செட்டி நாட்டரசர் அவர்கள் பேசுகையில் தற்போது தமிழ் எம்.ஏ. படித்தவாகள் தமிழ் 'வித்துவான்' பட்டம் பெற்றவர்களுக்கு இணையான தமிழ் அறிவைப் பெற முடியவில்லை என்பதைக் குறிப்பிட்டுக் கவலை தெரிவித்தார்கள்; இனி அப்படி முடியாது. தமிழில் ஒருவர் எல்லாம் தெரிந்துகொள்ளவேண்டும் என்பது முடியாது.

டாக்டர்கள் எப்படி எம்.பி.பி.எஸ். பட்டம் பெற மருத்துவத்துறை முழுவதையும் ஓரளவு படித்துவிட்டு கண்—காது—மூக்கு—உடல்—இருதயம்-இப்படி ஏதாவது ஒரு மருத்துவத்தில் சிறப்பாகக் கற்று அந்தச் சிகிச்சையில் ஈடுபடுகிறார்களோ, அதே போல்தான், தமிழில் பொதுவாக ஓரளவு படித்துவிட்டு, ஏதேனும் ஒரு துறையில் சிறப்பாகக் கற்கவேண்டும். இனி அப்படித்தான் முடியும்.

ஏனெனில், முன்பிருந்ததைப்போல் இப்போது நேரமும் வசதியும் இல்லை. இலக்கணம்—இலக்கியம்—கல்வெட்டு ஆராய்ச்சி—சிற்பக்கலை ஆராய்ச்சி—இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையைத்தான் நன்றாக கற்க முடியும். யெல்லாவற்றையும் கற்பதற்கு இனி காலம் இருக்காது!

செட்டிநாட்டரசர் குறிப்பிட்டதைப் போல், ஆங்கிலமும் நமக்குத் தேவை. தமிழுக்கு இணையாக ஆங்கிலமும், ஆங்கிலத்துக்கு இணையாகத் தமிழும் எல்லோரும் கற்றவேண்டும்.

நான் அண்மையில் கூட்டிய கல்லூரி முதல்வர்கள் மாநாட்டிலும் கூட இதைத்தான் சொன்னேன்; தலைமை ஆசிரியர்கள் மாநாட்டிலும் சொன்னேன்—'பள்ளியிலிருந்தும், கல்லூரியிலிருந்தும் வெளியேறும்போது ஒரு மாணவர் ஆங்கிலத்தில் பிழையின்றி பேச—எழுத—படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்; அதே அளவுக்கு நல்ல தமிழிலும் பேச—எழுத—படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்; அந்த வகையில் பாடத் திட்டத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும்' என்பதுதான் நான் அவர்களுக்கு விடுத்த கோரிக்கை.

"ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள், கணக்கு — விஞ்ஞானம் போன்ற பாடங்களையும் கற்பிப்

(4-ம் பக்கம் பார்க்க)

பாகிஸ்தானின் போர் ஆயத்தம்

'அச்சம் தேவையில்லை' என்கிறார் பாதுகாப்பமைச்சர்

புதுடில்லி, ஆக. 1—

"பாகிஸ்தான், போர் முயற்சிகளைச் செய்துகொண்டுதான் இருக்கிறது; அதைக் குறித்து நாம் பீதியடைந்துவிடக்கூடாது. "நாமும் அந்த அபாயத்தை எதிர்நோக்கி தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்"

என்று, பாதுகாப்பு அமைச்சர் சுவரண்சிங், நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

அமைச்சர்கள் ஊதியம் பெற்றனர்

சென்னை, ஆக. 1—

கடந்த 5 திங்களாக ஊதியம் பெருமல் பணியாற்றிவந்த தமிழக அமைச்சர்கள், இன்று தங்களின் ஊதியத்தைப் பெற்றுக்கொண்டனர்.

முதலமைச்சர் அண்ணா உட்பட எல்லா அமைச்சர்களும்,தங்களின் ஒரு திங்கள் ஊதியத்தை முதலமைச்சரின் தீ விபத்துத் துயர் துடைப்பு நிதிக்கு அளித்துள்ளனர்.

ஆட்சிமொழித் திருத்த மசோதா

நடப்புக் கூட்டத் தொடரிலேயே வரும்?

புதுடில்லி, ஆக. 1—

ஆட்சிமொழிகள் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா, நாடாளுமன்ற நடப்புக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவரப்படுமென்பது இப்போது நிச்சயமாகிவிட்டது. இம்மசோதா அடுத்த வாரம், அமைச்சரவையின் ஆய்வுக்கு வரும்.

ஆட்சிமொழியை மாற்றுவதற்கு எல்லா மாநிலங்களும் ஒப்புக்கொள்ளும்வரை ஆங்கிலமும் மத்திய அரசில் ஆட்சிமொழியாக நீடிப்பதற்கான வகையில் 1963-ம் ஆண்டு ஆட்சிமொழிச் சட்ட மூன்றாவது பிரிவைத் திருத்த இம்மசோதா வழிசெய்கிறது.

இந்தி மொழி பேசாத மாநிலங்கள் ஒப்புக்கொள்ளும்வரை ஆங்கிலத்தைக் கட்டாயமாகப் பயன்படுத்த இம்மசோதா வகை செய்கிறது.

இந்தியைத் தங்களுடைய ஆட்சிமொழியாக அறிவிக்காத மாநிலங்களுக்கும்—மத்திய அரசுக்கும் கடிதப் போக்குவரத்துக்கு ஆங்கிலத்தைப் பயன்படுத்தவும், ஏதாவது இரண்டு மாநிலங்களில் ஒன்றில் இந்தி ஆட்சிமொழியாக இல்லாவிட்டால், அந்த இரண்டு மாநிலங்களுக்கிடையே கடிதப் போக்குவரத்துக்கு ஆங்கிலத்தைப் பயன்படுத்தவும் இம்மசோதா வகை செய்கிறது.

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆகஸ்டு 12-ம் நாள் ஒத்திவைக்கப்படவிருப்பதால் இம்மசோதாவை நடப்புக் கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றுவது இயலாது என்று தெரிகிறது.

தீ விபத்துத் துயர் துடைப்புச் சீரமைப்பு நிதி

சென்னை, ஆக. 1—

சென்னை நகரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத் தமிழக முதலமைச்சர் திரட்டிவரும் நிதிக்கு, ஜூலை 31-ந் தேதி வந்த தொகை ரூ. 2,402.71.

இத்துடன் மொத்தம் ரூ. 11,18,645.15 சேர்ந்துள்ளது.

'இந்தியைத் தமிழர் ஒவ்வொருவரும் எதிர்த்தாக வேண்டும்'

'தமிழைவளர்க்க ஆங்கிலம் இன்றியமையாதது'

செட்டிநாட்டரசர் முத்தையாசெட்டியார் வற்புறுத்தல்

சென்னை, ஜூலை 31—

"இந்தி வந்தால் தமிழுக்கு ஆபத்து; இந்தி வளர்ந்தால் தமிழ் அழிந்துவிடும்; எனவே, இந்தியை ஒவ்வொரு தமிழரும் எதிர்த்தாக வேண்டும்; இதில் கட்சி வேற்றுமைக்கே இடமில்லை; 'இந்தி கூடாது' என்பதுதான் தமிழர்களின் குறிக்கோளாக இருக்கவேண்டும்"

என்று, செட்டிநாட்டரசர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள், கோகலே மண்டபத்தில் நடந்த கா. சு. பிள்ளை ஆராய்ச்சி மன்றத் தொடக்க விழாவில் உரையாற்றுகையில் வற்புறுத்தினார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"முப்பதாண்டுகட்கு முன்பு திரு. இராசகோபாலாச்சாரியார், பள்ளிகளில் இந்தியைப் புகுத்தியபோதுதான் தமிழ் நாட்டில் தமிழ் உணர்ச்சி ஏற்பட்டு இந்தி எதிர்ப்பு இயக்கம் உருவெடுத்தது.

அன்று இந்தியைப் புகுத்திய திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்களே, பின்னால், தாம் செய்த தவறினை உணர்ந்து கொண்டு இன்று இந்தியை எதிர்க்கிறார்.

அன்று தமிழைக் காக்க இந்தியை எதிர்த்தவர்களில் நானும் ஒருவன்.

அன்றிலிருந்து இன்றுவரை நான் இந்தியை எதிர்த்தே வருகிறேன். இந்தியை எதிர்ப்பது மட்டுமல்ல—'ஆங்கிலம் வேண்டும்' என்றும் சொல்லிவருகிறேன். இதை நான் எத்தனையோ கூட்டங்களில்—100—150 கூட்டங்களுக்கு மேல் இருக்கும் — சொல்லிவிட்டேன்.

ஆங்கிலம் இருந்தால்தான் இந்தி வராது; ஆங்கிலம் போய்விட்டால் இந்தி வந்துவிடும். ஆங்கிலத்தை வைத்துத்தான் தமிழை வளர்க்க வேண்டும்.

இப்போது டெல்லியில் கொண்டு வரப்பட்டுள்ள ஆட்சிமொழி மசோதாவே நமக்குப் போதாது என்று நாம் சொல்கிறோம்; இந்திக்காரர்களோ, வேறு விதத்தில் அதைக் குறை சொல்கிறார்கள்; 'இந்தியைப் புகுத்த அது போதாது' என்கிறார்கள் அவர்கள்!

தமிழ் நாட்டில் தமிழைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் நிலை இருப்பது வேதனை தருவதாகும். தமிழில் எல்லோருக்கும் நல்ல புலமை ஏற்பட வேண்டும்; பல்கலைக் கழகங்கள் சிறந்த ஆராய்ச்சி நூல்களை வெளியிட வேண்டும்."

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1998 ஆடி 17 (2—8—67) புதன்

சனநாயகம் பிழைத்தது!

★

சென்ற சில நாட்களாகப் பரபரப்பை ஏற்படுத்திவந்த மத்தியப் பிரதேச காங்கிரசு அமைச்சரவை இறுதியாகக் கவிழ்ந்துவிட்டது! 'இரும்பு மனிதர்' என்ற சிறப்புப் பெயர் பெற்றவரான துவாரக பிரசாத் மிஸ்ரா, தமது முதலமைச்சர் பதவியைத் துறக்க நேர்ந்தது தான் மிச்சம்.

மிஸ்ராவை முதலமைச்சராகக்கொண்ட ம. பி. காங்கிரசு அமைச்சரவை கவிழ்க்கப்பட்டதற்கு, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள்தான் காரணம்; அவர்களில் 36 பேர், காங்கிரசுக் கட்சியைவிட்டு வெளியேறி, எதிர்க் கட்சியுடன் இணைந்துவிட்டதன் எதிரொலிதான் இந்த வீழ்ச்சி!

காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த பலர், 'கட்சியைவிட்டு விலகி எதிர்க் கட்சியுடன் சேர்ந்துகொண்டனர்' என்பது தெரிந்தவுடனேயே—காங்கிரசுக் கட்சி பெரும்பான்மை இழந்துவிட்டதை உணர்ந்து—ஆட்சிப் பொறுப்பிலிருந்து காங்கிரசு அமைச்சரவை விலகிவிட்டிருக்க வேண்டும். இது ஒன்றுதான் சனநாயகத்தில் பின்பற்றக்கூடிய சிறந்த வழி.

ஆனால், முதலமைச்சர் துவாரக பிரசாத் மிஸ்ராவோ, சிறுபான்மையாகச் சிறுத்துப் போன காங்கிரசுக் கட்சியை மீண்டும் பெரும்பான்மையாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டார்; கட்சியைவிட்டு வெளியேறினவர்களை மீண்டும் காங்கிரசுக் கட்சிக்குத் திரும்பும்படி ஆசையும் காட்டினர்—அச்சமும் மூட்டினர்—எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு வலையும் வீசினர். மிஸ்ரா மேற்கொண்ட இத்தனை முயற்சியும், அவர் எதிர்பார்த்த பலனைக் கொடுத்திடவில்லை!

காங்கிரசுக் கட்சியைவிட்டு சிலர் வெளியேறி எதிர்க் கட்சியுடன் சேர்ந்துகொண்டனர் என்ற செய்தி தமக்குத் தெரியவந்ததும், வரவு-செலவுத் திட்டத்தை விவாதித்துக் கொண்டிருந்த சட்டமன்றத் தொடர்க் கூட்டத்தை, காலம் குறிப்பிடாமல்—மாநில ஆளுநரைவிட்டு—மிஸ்ரா ஒத்திவைததார்; சட்டமன்றத்தை ஒரேயடியாகக் கலைத்துவிட்டு, மறுதேர்தல் நடத்தப் பரிந்துரைக்கும்படி ஆளுநரிடம் அறிவிக்கப் போவதாகவும் அறிவித்தார்.

தாம் கொண்ட இம்முடிவுக்கு, காங்கிரசு மேலிடத்தையும் இந்திய அரசாங்கத்தையும் இணங்கச் செய்வதற்காகப் புதுடில்லிக்கு அவர் காவடி தூக்கிச் சென்றார்.

'சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு, மறு தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்' என்ற மிஸ்ராவின் கூற்றுக்கு, காங்கிரசு மேல்மட்டத்திலும், இந்திய அரசாங்கத்திலும் ஆதரவு இருந்தது—எதிர்ப்பும் இருந்தது; ஆனால் எதிர்ப்பைவிட ஆதரவே கூடுதலாக இருந்தது.

'மறுதேர்தல் நடத்தவேண்டும்' என்ற செய்தியைக் கேட்டதும், காங்கிரசுக் கட்சியைவிட்டு வெளியேறி எதிர்க் கட்சியுடன் சேர்ந்துகொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமோ அல்லது கணிசமானவர்களோ தேர்தலில் ஈடுபடுகின்ற தொல்லைகளுக்கு அஞ்சி—காங்கிரசுக் கட்சிக்கு மறுபடியும் திரும்பிவிடக் கூடும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையில் மிஸ்ரா மூழ்கியிருந்தார். அவர் நினைத்ததுபோல், 'மறு தேர்தல் நடத்த வேண்டும்' என்ற கருத்து, விலகிச் சென்ற காங்கிரசுக் கட்சியினருக்கு அச்சத்தை மூட்டவில்லை; அதற்கு மாருக, எதிர்க் கட்சியுடன் சேர்ந்துகொண்ட முடிவில், மேலும் அவர்கள் உறுதிபெற்றுவிட்டனர்.

சட்டமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டதும், தமது அமைச்சரவையின் விலகலைத் தந்துவிட்டு, எதிர்க் கட்சித் தலைவராகப் பொறுப்பேற்க வேண்டியதுதான், முன்னாள் முதலமைச்சர் மிஸ்ரா பின்பற்றவேண்டிய சனநாயக வழியாகும்.

மத்தியப் பிரதேச சட்டமன்றத்தில், இராஜமாதா விஜயராஜ் சிந்தியா அவர்களைத் தலைவராகக் கொண்டு எதிர்க் கட்சியாகச் செல்பட்டுவந்த சம்யுக்த விதாயக் தளம், இப்பொழுது ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது; அது, சில அரசியல் கட்சிகளைக் கொண்ட கூட்டு அமைப்பாகும்.

சட்டமன்றத்தில் ஆளும் கட்சி வீழ்த்தப்படும்பட்சத்தில், குறைந்த எண்ணிக்கையுடையதாக எதிர்க் கட்சி இருந்திட்டாலும், எதிர்க் கட்சியை அழைத்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படிக் கோர வேண்டியது, மாநில ஆளுநரின் கடமையாகும். தமக்குள்ள வலிவை நினைத்து, ஆளுநரின் கோரிக்கையை எதிர்க் கட்சி ஏற்க மறுத்தால்தான், 'சட்டமன்றத்தைக் கலைத்து மறுதேர்தல் நடத்தவேண்டும்' எனப் பரிந்துரைக்க ஆளுநர் துணியலாம். இதுதான் அறவழி—இம்முறைதான் சட்ட உணர்வுக்கு உட்பட்டிருப்பதுமாகும்.

அங்குள்ள எதிர்க் கட்சி, இப்போது, ஏற்கனவே இருந்ததுபோல் ஆட்சிப் பொறுப்பை ஏற்கமுடியாத சிறுபான்மைக் கட்சியாக இல்லை. எதிர்க் கட்சியாக இருந்த சம்யுக்த விதாயக் தளத்தின் எண்ணிக்கை 153 ஆகவும், காங்கிரசுக் கட்சியின் எண்ணிக்கை 137-ஆகவும் மாற்றம் பெற்றிருக்கின்றன.

'சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தல் நடத்தவேண்டும்' என்ற துவாரக பிரசாத் மிஸ்ராவின் கருத்துக்கு முதற்கண் ஆதரவு காட்டிய காங்கிரசு மேலிடமும், இந்திய அரசும், பின்னர் மனமாற்றம் பெற்று, எதிர்க் கட்சியை அழைத்து ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்ததன் பலனாக, இன்று எதிர்க் கட்சி, ஆளுங்கட்சியாக மாறியிருக்கிறது.

இதுதான் சிறந்த முடிவு.

—கா. க.

அரசாங்கப் பணம் கையாடல்

அதிகாரிகள் வேலைநீக்கம்

ஐதராபாத், ஆக. 1—ஆந்திராவில் 1965 ஏப்ரல் 1-ந் தேதிக்கும்—1966 மார்ச் 1-ந் தேதிக்கும் இடைப்பட்ட காலத்தில் ரூ. 7.72 இலட்சம் அரசாங்கப் பணம் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது.

1966 ஆகஸ்ட் நிலவரப்படி ரூ. 71.94 இலட்சம் சம்பந்தப்பட்ட 1,412 கையாடல் வழக்குகளில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது.

ரூ. 3.82 இலட்சத்தை வசூலித்துவிட்டு ஆந்திர அரசாங்கம், ரூ. 5.26 இலட்சத்தைத் தள்ளுபடி செய்தது. இந்த மோசடி சம்பந்தமாக பல அதிகாரிகள் வேலையிலிருந்து வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள்.

மொரார்ஜிக்கு அண்ணா இடித்துரை

சென்னை, சூலை 31—

"ஒருவர் தன் மாநிலம் பற்றியும், அதன் மக்களது நலன்கள் பற்றியும் பேசுவது, 'குறுகிய வட்டார மனோபாவம்' என்றும், 'அவ்வாறெல்லாம் பேசலாகாது' என்றும் சொல்லுகிறார்கள்—இது முற்றிலும் தவறான வாதம்!

"ஒரு சங்கிலி பலமாக இருக்க வேண்டுமானால், அதன் ஒவ்வொரு பகுதியும் பலமாக இருக்கவேண்டும்—இதையே நாட்டுக்கும் உரியதாகக் கொள்ளலாம்—நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் பலமுடையதாக்கினாலன்றி நம்மால் நாடு முழுவதையும் பலமுள்ளதாக ஆக்க முடியாது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், ஆபட்ஸ்பரியில் நடந்த வெங்கட்ராமன் பாராட்டு விழாவில் பேசுகையில் சுட்டிக் காட்டினார்கள்.

[சென்னைக் கடற்கரையில் நடை தைப் பற்றிக் கவலைப்பட்டால் பெற்ற கூட்டத்தில் பேசிய மொத்தமாக நாட்டைப் பற்றி மொரார்ஜி தேசாய், 'ஒவ்வொரு யார் கவலைப்படுவது' எனக் குறிப் வரும் தங்கள் தங்கள் மாநிலத் பிட்டுப் பேசியது நினைவிருக்கலாம்]

காங்கிரசு அமைச்சர்களின் ஊழல் சந்திக்கு வருகிறது!

மேற்கு வங்க அரசு நடத்திய விசாரணை மூலம் வெளியாகும் தகவல்கள்

அமைச்சரின் செயலாளர் அவர் துணைவியார் 'பெர்மிட்' பெற்ற விந்தை!

போக்குவரத்து அமைச்சருடன் முதலமைச்சரும் சேர்ந்து புரிந்த வரைமுறையற்ற செயல்கள்

கல்கத்தா, சூலை 31—மேற்கு வங்க முன்னாள் காங்கிரசு ஆட்சி, பஸ் பெர்மிட் வழங்குவதில் மோசமான ஊழல் புரிந்திருப்பதாக விசாரணை மூலம் தெரியவந்திருக்கிறது.

மேற்கு வங்கக் கூட்டு முன்னணி அரசு இவ்விசாரணைக்கு ஏற்பாடு செய்திருந்தது.

மேற்கு வங்கத் துணை முதலமைச்சரும், போக்குவரத்து அமைச்சருமான ஜோதி பாசு, 'முன்னாள் முதலமைச்சரும், போக்குவரத்து அமைச்சரும் பஸ் பெர்மிட் வழங்குவதில சில நடைமுறைகளைக் கையாண்டு—அவை நேர்மையான நடைமுறை என்று சொல்ல முடியவில்லை — முடிவு செய்திருக்கின்றனர்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'அது என்ன' என்பதைக் கூற மறுத்த அவர், 'பொதுத் தேர்தல் நெருக்கத்தில்தான் இப்படிப் பல நடைபெற்றிருக்கின்றன' என்றார்.

இந்த அனுமதிகள், இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி இரண்டு பிரிவுகளாக அளிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த விசாரணை, முன்னாள் தலைமைச் செயலாளரும் தற்பொழுது முதலமைச்சருக்கு ஆலோசகராக இருப்பவருமான ஆர். குப்தா என்பவரால் நடத்தப்பட்டிருக்கிறது.

தமது அறிக்கையில் குப்தா கூறியிருப்பதாவது:—

"முதலமைச்சரும், போக்குவரத்துத் துறை அமைச்சரும் இரண்டு தனித் தனி பட்டியல்களை—பெர்மிட் அனுமதிப்பதற்காக—போக்குவரத்துக் கமிஷனருக்கு அனுப்பியிருக்கின்றனர். ஒரு பட்டியலில், 'முதல்வர் பட்டியல்' என்றும், இன்னொன்றில் 'போக்குவரத்து அமைச்சர் பட்டியல்' என்றும் குறியிடப்பட்டிருந்தன.

போக்குவரத்துக் கமிஷனர், 2,000 கோரிக்கை மனுக்களிலிருந்து 499 மனுக்களைத் தேர்ந்தெடுக்கும் ஒரு நாடகம் நடத்தியிருக்கிறார்!

அமைச்சர்கள் மட்டத்தில் பெற்றுக்கொண்ட மனுக்களை மட்டும், 'நல்ல மனுக்கள்' என்று முடிவு செய்வது ஒரு சாதாரண நிகழ்ச்சியல்ல!

பஸ் பெர்மிட்டுக்கான மனுக்களை அமைச்சுத் துறைகளோ, போக்குவரத்துக் கமிஷனரோ பெற்றுக்கொள்வது என்பது தவறான நடைமுறையின் உச்சக் கட்டமாகும். இரண்டாவதாக, போக்குவரத்துப் பாதைக்கு அனுமதி அளிக்கும் மனுக்களைத் தேர்ந்தெடுப்பது போக்குவரத்துக் கமிஷனரின் வேலையல்ல; இது, மோட்டார் வண்டிகள் சட்டத்தின்படி, வட்டாரப் போக்குவரத்து இயக்குநரின் வேலையாகும். இம்முறையில் எல்லாமே முறைகேடானதும், சட்டவிரோதமானதுமான முறையில் நடைபெற்றுள்ளன. இதற்கு அரசு, பாதுகாப்புச் சட்டத்தின் துணையையும் பெற்றிருக்கிறது!

1966 டிசம்பர் 15-ந் தேதிக்குள் பெற்றுக்கொள்ளப்படும் மனுக்கள்தான் பரிசீலிக்கப்படும் என்று முன்னாலேயே அறிவித்திருந்தும், அதற்குப் பிறகு பெற்றுக்கொண்டுள்ள பல மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஒருவருக்கு ஓர் அனுமதிக்குமேல் தரப்படமாட்டாது என்பது இன்னொரு முக்கிய தீர்மானமாக இருந்தது; இதுவும் மீறப்பட்டுள்ளது.

சிலர் விஷயத்தில், ஒரே இடத்தில் குடியிருக்கும் ஒரே குடும்பத்தின் பல உறுப்பினர்களின் பேரிலும் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

வெட்ககரமான இன்னொரு நிகழ்ச்சி, போக்குவரத்து அமைச்சரின் அந்தரங்கச் செயலாளருக்கும், அவரது மனைவிக்கும் பஸ் பெர்மிட் வழங்கியதாகும்.

டிராம், பஸ் போக்குவரத்து

(4-ம் பக்கம் பார்க்க)

விட்டுச்சென்ற பணியை முடிக்கத் துணையாக இருங்கள்!

வெங்கட்ராமனுக்கு கருணாநிதி வேண்டுகோள்

"நமது அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய ஆர். வெங்கட்ராமன் அவர்களுக்குப் பாராட்டு விழாவும், வழியனுப்பு விழாவும் இரண்டுமாகச் சேர்த்து நடத்துவதோடு சில வரங்களைக் கோரும் விழாவாகவும் இந்த விழா அமைந்துள்ளது.

"தமிழகத்தின் தொழில் வளத்தைக் கட்சிக்கு அப்பாற்பட்டு தனிப்பட்ட முறையில் தனித் திறமையோடு போற்றி வளர்த்தார் வெங்கட்ராமன்; நாமும் கட்சிக்கு அப்பாற்பட்டு நின்று அவரிடத்தில் தொழில் வளத்துக்கு உதவக் கோருகிறோம்.

"ஆர். வெங்கட்ராமன் அவர்களை ஆசிகூறி அனுப்பும் இவ்விழாவில் நமது ஆசைகளையும் வெளியிடுகிறோம். நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அமைச்சராகி காரணங்களைக் கூறி தொழில் வளர்ச்சிக்கான நமது கோரிக்கைகளைத் தட்டிக்கழிக்கும் நிலையில் அவர் இருந்திருக்கக்கூடும். பத்தாண்டுக்காலம் அவருடன் சேர்ந்து பழகும் வாய்ப்புப் பெற்றவன் நான். 'இல்லை' என்று சொல்லுவதையும் இனிமையோடு சொல்லுவார் அவர்.

"தமிழ் நாட்டின் தொழில் வளத்துக்கான தூதுவராக இப்போது நாம் அவரை டில்லிக்கு அனுப்புகிறோம்—ஒரு நல்லவரை அனுப்புகிறோம்! கோட்டையில் அவர் விட்டுச் சென்ற அறையில்தான் நானிருக்கிறேன். அவர் நார்வே நாடு சென்று சேலம் இரும்புக் கனியையும்,நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் கொண்டு உருவான இரும்புக் கட்டி—அவர் மேசையில் விட்டுச் சென்றது — இன்னும் என் மேசையின் மீதே இருக்கின்றது! அவர் தொட்டுவிட்டுச் சென்ற வேலையின் அடையாளமாக, அது அங்கே இருக்கின்றது! அவர் தொட்ட பணியை முடித்துவைக்கத் தமிழகத்துக்கு நல்ல துணையாக அவர் இருக்கவேண்டுமென்று வாழ்த்தி வழி அனுப்புகிறோம்!"

—மு. கருணாநிதி

(ஆபட்ஸ்பரியில் நடந்த பாராட்டு விழாவில்)

முதலமைச்சர் நிதி

திருவையாறு வட்டாரத்தில் நன்கொடை

திருவையாறு உள்ளாட்சி ஒன்றிப்பின் சிறப்புக் கூட்டம், 24—7—67 அன்று தலைவர் திரு. எம். இராதாகிருஷ்ணகாடேராவ சாகிப் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் சென்னை நகர தீ விபத்து நிவாரண நிதியாக திரட்டப்படும் முதல் அமைச்சர் நிதிக்கு ரூ. 21,000 ஒன்றிப்பின் பொது நிதியிலிருந்து அளிப்பதென ஏகமனதாகத் தீர்மானிககப்பட்டது.

மேலும், திருவையாறு வட்டார கிராம நகரப் பஞ்சாயத்துக்களிலிருந்து மேற்படி நிதிக்கு ரூ. 4,300 வசூல் செய்யப்பட்டுள்ளது; இதையும் சேர்த்து இவ்வட்டாரத்தின் சார்பாக ரூ. 25,300 அளிக்கப்படுகிறது.

கேரளத்திற்கு உடனடியாக அரிசி அனுப்ப அண்ணா உத்தரவு

'நெருக்கடியானதோர் கட்டத்தில் நாங்கள் இருக்கிறோம்'

'5,000 டன் அரிசி அனுப்புவது சோதனையே'

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் விளக்கம்

சென்னை, ஜூலை 31—

தலைமையமைச்சர், துணைத் தலைமையமைச்சர், தமிழ்நாடு கவர்னர் ஆகியவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், கேரளத்துக்கு உடனடியாக 5,000 டன் அரிசி அனுப்ப முடிவு செய்திருக்கிறார்.

இத்தகவலை வெளியிட்ட தமிழக உணவு அமைச்சர் கே ஏ. மதியழகன், மத்திய அரசு இந்த அரிசிக்குப் பதிலாகக் கோதுமைப் பண்டங்களைத் தருவது என்ற அடிப்படையில் கேரளத்திற்கு அரிசி அனுப்புவதாகக் கூறினார்.

அண்ணா அவர்கள், அமைச்சர் கே. ஏ. மதியழகனிடம் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பிறகு கேரளத்திற்கு அரிசி அனுப்புவது என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

இத்தகவலை தலைமையமைச்சருக்கும், துணைத் தலைமையமைச்சருக்கும் அறிவித்துவிட்டதாக குறிப்பிட்ட அமைச்சர் மதியழகன் அவர்கள் கூறியதாவது:—

"நாங்கள் மிகவும் நெருக்கடியான ஒரு கட்டத்தில் இருக்கிறோம்; 5,000 டன் அரிசியை அனுப்புவது என்பது கடுமையான ஒரு சோதனையில் ஈடுபடுவதாகும்.''

கேரளத்துக்குத் தலைமையமைச்சர் செய்யப்போவதென்ன?

'மத்திய அரசின் உணவுக்கொள்கை தோல்வி'— டில்லியில் கேரள முதலமைச்சர் விளக்கம்

புதுடில்லி, ஜூலை 31—

கேரளத்தில் நிலவும் கடுமையான அரிசிப் பற்றுக்குறையை எடுத்துக்கூற இங்கு வந்திருக்கும் முதலமைச்சர் நம்பூதிரிபாடு, தலைமையமைச்சரிடமும், உணவு அமைச்சரிடமும் நடத்திய பேச்சுவார்த்தையில் ஓரளவுக்குத் திருப்தியடைந்திருக்கிறார்.

நம்பூதிரிபாடின் வருகையால் உடனடியாகப் பெரும் அளவில் பலன் எதவும் கிடைக்கவில்லையெனினும், தன்னால் இயன்றதையெல்லாம் மனப்பூர்வமாகச் செய்ய மத்திய அரசு முயற்சிக்கும் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

தலைமையமைச்சர் இந்திரா காந்தி கேரள எம்.பி.-க்களிடம் சொன்ன உறுதிமொழியைத்தான் நம்பூதிரிபாடிடமும் சொல்லியிருக்கிறார்.

தற்போதைய நிலையில் மத்திய அரசு வாக்களித்திருந்த—மாதம் ஒன்றுக்கு 75,000 டன் அரிசியைத் தர இயலாது என்றும், அதில் பாதி அளவுக்கும் குறைவாகவே தர இயலுமென்றும், மீதியைக் கோதுமையாகக் கொடுத்து ஈடு கட்டப்படும் என்றும் தெரிகிறது.

கடைபிடித்த கொள்கைகள் தோல்வியுற்றன!

நடைபெற்ற பத்திரிகையாளர் கூட்டமொன்றில் பேசிய நம்பூதிரிபாடு கூறியதாவது:—

"உணவுப் பிரச்சினையில் மத்திய அரசு கடைபிடித்த எல்லாக் கொள்கைகளும்- மாநிலங்களைத் தனி உணவு மண்டலங்களாக்கியது உட்பட மாபெருல் தோல்வியையே கண்டுள்ளன. இத்தோல்விகளின் பலனை கேரளம் அனுபவித்துக்கொண்டு வருகிறது!''

அரிசிக் கப்பல்கள் திருப்பிவிடப்படுகின்றன!

10,000 டன் தாய்லாந்து அரிசியைக் கொண்டுவரும் கப்பல் ஒன்று கொச்சிக்குத் திருப்பிவிடப்பட்டுள்ளதென்றும், ஆகஸ்டு முதல் வாரத்தில் அது கொச்சியை அடையும் என்றும் உணவமைச்சர் ஜெகஜீவன்ராம் கூறினார்.

அதேபோல், 7,000 டன் அர்ஜெண்டைனா அரிசியை ஏற்றிக் கொண்டு மலேசியா செல்லும் கப்பலொன்றும் கொச்சிக்குத் திருப்பி விடப்பட்டிருக்கிறது.

"சிங்கப்பூரிலிருந்து 5,300 டன் அரிசியை ஏற்றிக்கொண்டு வேறொரு கப்பலும் இம்மாதத்திலேயே கொச்சியை அடையும்'' என்றும் அமைச்சர் கூறினார்.

மருத்துவமனையில் மே. சி. தூயமணி

மேட்டுப்பாளையம் வட்ட தி.மு.க. செயலாளர் மே. சி. தூயமணி நெஞ்சுவலி காரணமாக கோவை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவரை உடுமலை நாராயணன் எம்.பி., பி. ஏ. சாமிநாதன் எம்.பி., சி. டி. தண்டபாணி எம்.பி., சு. துரைசாமி எம்.எல்.ஏ., எம். கோபால், மு. இராமநாதன், மாணிக்கவாசகம் எம்.எல்.ஏ., பழனியம்மாள் எம்.எல்.ஏ., குமாரசாமி எம்.எல்.ஏ., கொடுமுடி கிருஷ்ணன், பேச்சிமுத்து, இரா. முருகேசன், வே. சுப்பிரமணி, அத்தானிபாபு. க. அன்பரசு, சோ. கு. பழனிச்சாமி, வெ. செகநாதன், சிதம்பரம், தேவராசன் மற்றும் பலர் சென்று நலம் விசாரித்து வந்தனர்.

திண்டிவனத்தில் அமைச்சர் சத்தியவாணிமுத்து

சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தைத் துவக்கிவைத்தார்

25—7—67 மாலை 7 மணியளவில் திண்டிவனம் காந்தி திடலில் திண்டிவனம் வட்ட சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் துவக்க விழாவும், அமைச்சர் சத்தியவாணிமுத்துஅவர்களுக்குப் பாராட்டுக் கூட்டமும் தோழர் கே. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள ஆயிரக்கணக்கான சலவைத் தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் நோக்கங்களை தலைவர் எடுத்துக் கூறினார்.

அடுத்து சென்னை ஆர். கதிர்வேலு, சா. முத்து(54-வதுவட்டம்), தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவர் சி. ஆர். சோலப்பா, மதுரை மாவட்ட சங்கத் தலைவர் எஸ். மாணிக்கம், திண்டிவனம் வட்டச் செயலாளர் எஸ். நடராசன், சட்டமன்ற உறுப்பினர் ஏ. ஜி. பாலகிருஷ்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆ. தங்கவேலு ஆகியோர் பேசினர்.

இறுதியில் அமைச்சர் அவர்கள் சங்கத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில், சங்கத்தின் குறைகளை கவனித்து ஆவன செய்வதாக உறுதி கூறினார்.

சங்கத் தலைவர் டி. கே. செயராமன் அமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துமடல் வாசித்தளித்தார்.

முடிவில் சங்கச் செயலாளர் ஜி. வீராசாமி நன்றி கூறினார்.

வருந்துகிறோம்

"சென்னை 2-வது வட்ட கே. வி.கே. சாமி பகுத்தறிவுப் பாசறையின் முன்னாள் அவைத்தலைவரும் வட்டக் கிளையின் உறுப்பினருமான தோழர் இரா. முத்து அவர்கள், 27—7—67 காலை 11-30 மணியளவில் மாரடைப்பால் இயற்கையெய்தியது குறித்து அவரது குடும்பத்தினருக்கு 2-வது வட்டக் கிளைக் கழகமும், துணை மன்றங்களும் ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் தெரிவித்துக் கொள்ளுகின்றன'' என்று வட்டச் செயலாளர் சே. அரசு தெரிவிக்கிறார்.

மனைக்கட்டு பட்டா வழங்கு விழா

நெ. 71, சிக்கராயபுரம் கிராமத்தில் 26—7—67 மாலை 6 மணியளவில் குடிமனை பட்டா வழங்கும் விழா நடைபெற்றது. திரு. எம். வி. சோலையப்பன் (ஊராட்சி ஒன்றிப்புத் தலைவர்) தலைமை வகித்தார்; எம். கோபால் (குன்றத்தூர் சட்டமன்ற உறுப்பினர்) அவர்களும் கலந்துகொண்டார்.

திருப்பெரும்புதூர் தாசில்தார், ஏழை ஆதித்திராவிட மக்களுக்குக் குடிமனைப் பட்டா வழங்கினார்.

சிக்கராயபுரம் ஊராட்சித் தலைவர் எம். வீரராகவனும் உடனிருந்தார்.

கள்ளக்கடத்தல்காரர் மீது

நடவடிக்கை

மல்லாங்கிணறு என்ற ஊரில் மிதிவண்டி மூலமாக சர்க்கரை கடத்தப்படுவதைப் பற்றி அருப்புக்கோட்டை தோழர் பி. பி. என். நல்லதம்பி மூலம், வட்ட விநியோக அதிகாரிக்குத் தகவல் கொடுத்தனர்.

வட்ட விநியோக அதிகாரி இம்முயற்சியில் ஈடுபட்ட தோழர்கள் மாரியப்பன், சித்தனுதன் ஆகியோரைப் பாராட்டியதோடு, கடத்தல் வேலையில் ஈடுபட்ட தேவதாசு என்பவரின் சர்க்கரைக் கோட்டாவை இரத்து செய்து அவர்மீது நடவடிக்கை எடுத்தார்.

கழகத் தொழிற்சங்கச் சாதனைகள்

வேலையிழந்தவர்கட்கு இழப்பு ஈடு கிடைத்தது

திருப்பூர் இப்ராகீம் மண்டியில் வேலை பார்த்துவந்த இராமசாமி என்ற தொழிலாளியை, நிர்வாகம் வேலைநீக்கம் செய்துவிட்டது. இது பற்றி பொதுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, தொழிலாளிக்கு இழப்பு ஈட்டுத் தொகையாக ரூ. 210 பெற்றுத் தரப்பட்டது.

இப்பிரச்சினையில் சங்கத்தின் சார்பில் தலைவர் பி. எஸ். கோவிந்தசாமி கலந்துகொண்டார்.

திருப்பூர் காதர் நிட்டிங் கம்பெனியில் வேலை பார்த்துவந்த என். சுப்பிரமணியம் என்ற தொழிலாளியை, நிர்வாகம், வேலைநீக்கம் செய்துவிட்டது. இதுபற்றி யூனியன் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தத் தொழிலாளிக்கு இழப்பு ஈட்டுத் தொகை ரூ. 341 (போனசுத் தொகை நீங்கலாக) கொடுக்கவேண்டும் என்று கோவை தொழில் துறை அதிகாரி முன்னிலையில் ஒப்பந்தம் ஏற்பட்டது.

தொழிற்சங்கத்தின் சார்பில் சங்கச் செயலாளர் இரா. முருகேசன் கையெழுத்திட்டார்.

திருப்பூர் காஷ்மீர் ஓசைரிசில் வேலை பார்த்துவந்த நடராசன் என்ற தொழிலாளியை, நிர்வாகம் வேலைநீக்கம் செய்துவிட்டது. இது பற்றி சங்கத்தின்மூலம் நடவடிக்கை எடுத்து, அத்தொழிலாளிக்கு இழப்புஈட்டுத் தொகை ரூ. 125 பெற்றுத் தரப்பட்டது.

தொழிற் தகராறுபற்றிய விசாரணையில் சங்கத்தின் சார்பில் செயலாளர் இரா. முருகேசன், பழனிசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருப்பூர் யுனிவர்சல் தியேட்டரில் உதவி ஆப்ரேட்டராக வேலை பார்த்துவந்த ஜாபர் என்ற தொழிலாளியை, நிர்வாகம் வேலைநீக்கம் செய்துவிட்டது; இதுபற்றி முன்னேற்றச் சங்கத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து, அத்தொழிலாளிக்கு நட்டஈட்டுத் தொகையாக ரூ. 650 பெற்றுத் தரப்பட்டது.

கோவை தொழிற்துறை அலுவலர்முன் நடைபெற்ற விசாரணையிலும், நிர்வாகத்தினரிடம் நேரில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் சங்கத்தின் சார்பில் தலைவர் பி. எஸ். கோவிந்தசாமியும், செயலாளர் இரா. முருகேசனும் கலந்து கொண்டனர்.

திருப்பூர் திருமுருகன் நிட்டிங் கம்பெனியில் இரண்டாண்டுக் காலமாக வேலை பார்த்துவந்த வெங்கடாசலம் என்ற தொழிலாளியை நிர்வாகம் வேலை நீக்கம் செய்துவிட்டது. இதுபற்றி, ப. தொ. மு. சங்கப் பொருளாளர் கு. வெங்கடாசலம் நேரில் பேச்சுவார்த்தை நடத்தி, இழப்புஈடு தொகையாக ரூ. 250 பெற்றுத் தரப்பட்டது.

அருப்புக்கோட்டையில் அமைச்சர் செ. மாதவன்

விழாக் கோலத்துடன் நகர மக்கள் வரவேற்பு

அமைச்சர் செ. மாதவன் வருகையை முன்னிட்டு 25—7—67 அன்று அருப்புக்கோட்டை நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் தோரணங்களும், வாழை மரங்களும், வரவேற்பு வளைவுகளும், கண்ணைக் கவரும் மின்னொளியும் அமைக்கப் பட்டிருந்தன.

நகரத்திலுள்ள நாவலர் மன்றம், வள்ளுவர் மன்றம், எம். எஸ் இராமசாமி படிப்பகம், 7, 8-வது வட்ட தி. மு. க., காலனி தி. மு. க. கிளைகள் ஆகியவற்றின் ஏற்பாடாகும் இது.

அமைச்சர் வருகையைக் காண காலை முதலே கிராமத்திலுள்ள மக்களும் தோழர்களும், நகரத்தை முற்றுகையிட்டவண்ணமிருந்தனர்.

மாலை 4-30 மணியளவில் மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையில் அமைச்சர் மாதவன் அருப்புக்கோட்டை வந்து சேர்ந்தார்கள்.

சுற்றுலா மாளிகைக்கு வந்து சேர்ந்த அவரை இராமநாதபுரம் மாவட்ட அவைத் தலைவர் சிவ. சண்முகசுந்தரனார், ஏ. ஆர். பெருமாள் எம்.எல்.ஏ., பி. பி. என். நல்லதம்பி, சு. நடராசன், ஆ. குருசாமி, கமால் முகைதீன், கிருட்டிணன், செல்லச்சாமி, புரட்சிக்காளை ஆகியோர் அகமும் முகமும் மலர வரவேற்றனர்.

கவிஞர் எம். எஸ். இராமசாமி, வட்டச் செயலாளர் சின்னச்சாமி, நகரச் செயலாளர் பொன்னுச்சாமி ஆகியோர் அமைச்சரின் காருக்கு முன்செல்ல வரவேற்புக் குழுவினர் பின்செல்ல முதல் நிகழ்ச்சியாக முத்துராமலிங்கபுரம் அரசினர் உயர்நிலைப் பள்ளி துணைக் கட்டிடக் கால்கோள் விழா நடைபெற்றது.

பின்பு ஆர். 2 புளியம்பட்டி கூட்டுறவு சங்கச் சார்பில் தேநீர் விருந்தும்—வரவேற்பும் நடைபெற்றது

தொடர்ந்து பட்டுச் சங்கம்—எஸ். பி. கே. உயர்நிலைப் பள்ளி பழைய மாணவர் சங்க வரவேற்பு; கிருபா ஆசுரம் முஸ்லிம் லீக், நெசவாளர் காலனி, அருப்புக் கோட்டை ஊராட்சி ஒன்றிப்பு வணிகர் சங்க வரவேற்பு—ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

இறுதியாக பாவடித் தோப்பில் கவிஞர் எம். எஸ். இராமசாமி படிப்பகத்தின் சார்பில் நடைபெற்ற மாபெரும் வெள்ளணி நாள் பொதுக்கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளா எஸ். எஸ். தென்னரசு தலைமை தாங்கினார். அவருக்கு நாவலர் மன்றம், தங்கக் கணையாழி ஒன்றை தோழர் பி. பி. என். நல்லதம்பி தர—அமைச்சர் மாதவன் அணிவித்தார்.

அமைச்சருக்கும், மற்றவர்களுக்கும் ஏராளமான மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. இறுதியில் அமைச்சர் மாதவன், நன்றி தெரிவித்து உரை நிகழ்த்தினார்.

மறுப்பு

"நெல்லையிலிருந்து வெளிவருகின்றன 'தின மலர்' (27—7—67) இதழில், 'திருச்செந்தூர் வட்டச் செயலாளர் பொ. கண்ணபிரான் அறிக்கை' என்ற பெயரில் வெளிவந்திருக்கும் செய்திகள் அத்தனையும் தவறு. நான், 'தின மலர்' பத்திரிகைக்கு அறிக்கை கொடுக்கவில்லை; எந்த நிருபரும் பேட்டியும் காணவில்லை; ஆகவே, மேற்படி செய்திக்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை'' என்று, திருச்செந்தூர் வட்ட தி.மு.க. செயலாளர் பொ. கண்ணபிரான் அறிவிக்கிறார்.

வருவாயைப் பெருக்கும் வழியே அரசுடைமையாக்கும் கொள்கை

யாரையும் பழிவாங்கும் நோக்கம் அரசினருக்கு இல்லை

'தொழிலறிஞர்களையும் அரசுடைமையாக்கவே விழைகிறோம்'—ஆரணி அரசு பஸ் துவக்க விழாவில் அண்ணா — கருணாநிதி உரைகள்

சென்னை, ஆக. 2—

"தனியார் பஸ்களை அரசுடைமையாக்கும் திட்டம் அரசின் வருவாயைப் பெருக்கிக்கொள்ளவேயன்றி, யாரையும் பழிவாங்கும் எண்ணத்தின்பாற்பட்டதன்று. இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிவைக்கத் தொழிலதிபர்களும் தக்க யோசனைகளை கூற வேண்டும்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், அரசுடைமையாகும் முதல் பஸ்ஸை (ஆரணிக்கு) வழியனுப்பிவைத்து உரையாற்றுகையில் விளக்கமளித்தார்கள்.

சென்னை—ஆரணி தடத்தில் முதன் முதலாக அரசு பஸ் செல்வதைத் துவக்கிவைக்கும் விழா நேற்றுக் காலை எஸ்பிளனேடு விரைவுப் பேருந்து நிலையத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

விழாவுக்குப் பொதுப் பணித் துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் தலைமைவகித்தார்.

பஸ் அதிபரும் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவருமான பொள்ளாச்சி நா. மகாலிங்கம், சென்னை—ஆரணி தடத்தில் இதுவரை பஸ் போக்குவரத்தை நடத்திவந்த திரு. இராசகோபால் (நாயுடு) ஆகியோரும் விழாவுக்கு வந்திருந்தனர்.

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நாட்டுடைமையாக்கும் இத்திட்டம், அரசின் வேறு பல திட்டங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் முதல் கட்டமாகத் திகழ்கிறது. இத்திட்டம், அரசுக்குப் புதிய ஊக்கத்தையும் வருவாயையும் தரும் என்று நம்புகிறேன்.

இத்திட்டம், திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பேற்குமுன்னரே மக்கள் மன்றத்தில் உறுதிமொழி அளிக்கப்பட்ட திட்டமாகும். ஆட்சிப் பொறுப்பேற்றபின் சட்டமன்றத்தில் விளக்கவேண்டிய வகையில் விளக்கிச் சொல்லித்தான் இதனைச் செயல்படுத்தியிருக்கிறோம்.

எந்த அரசும் எவ்வழியிலும் வருவாய்ப் பெருக்கத்தை ஊக்குவிப்பதில் ஈடுபட்டே தீரவேண்டும். மக்களுக்குரிய தேவைகள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகின்றன.

மக்களாட்சி நடைபெறும் ஒரு நாட்டில் மக்கள் தேவைகளுக்கேற்ப வரியுடன் வருவாயையும் தேடிக்கொள்ள வேண்டும். எனவேதான், வருவாய் தரும் இத்திட்டத்தை அரசு மேற்கொண்டிருக்கிறது. இது மக்களாட்சிக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

எந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவரையும் நிலைகுலையச் செய்ய வேண்டுமென்பதோ தொழில்களைத் தாறுமாருக்கி நாசமாக்கி விடவேண்டும் என்பதோ இந்த அரசின் நோக்கமல்ல !

சில அடிப்படைக் கொள்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருப்பதால் இதைச் செய்கிறோம்.

எங்களுக்கும் பஸ் முதலாளிகள் பலர் நண்பர்களாக இருக்கிருர்கள். அவர்கள் பல்லாண்டுகளாகப் பொதுமக்களுக்குச் செய்துள்ள வசதிகளை நன்கு கனியவைத்து எங்களிடம் ஒப்படைத்திருக்கின்றனர்; பஸ் வழிகளைச் சீர்படுத்திச் செம்மையாக்கித் தந்திருக்கின்றனர்; அவர்களைப் பாராட்டுகிறேன்.

இந்தப் பஸ் ரூட்டை இதுவரை நடத்திவந்த திரு. இராசகோபால் (நாயுடு) அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு, பஸ் முதலாளிகளைத் தள்ளிவைத்துவிட்டு, இத்திட்டத்தைச் செயல்படுத்தவில்லை; அவர்களையும் உள்ளடக்கித்தான் இதைச் செயல்படுத்துகிறது. எனவே, முழு அளவுக்கு இத்திட்டம் நிறைவேற்றப்படும் வகையில் பஸ் முதலாளிகள் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

பஸ் முதலாளிகளிடம் இருப்பதைப் பறித்துவிட வேண்டும் என்ற நோக்கம் இந்த அரசுக்கு இல்லை. எந்த முதலாளி எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும், தொழிலில் வெற்றி பெறவேண்டும் என்பதே முதல் நோக்கமாக இருக்கும்; அடுத்து, வருவாய் பற்றிய நோக்கம் இருக்கும்; அதற்கடுத்து, 'இத்தொழிலின் மூலம் நாட்டுக்கு நன்மை இருக்கிறதா' என்ற நோக்கம் இருக்கும்.

இத்தகைய தொழிலறிவு படைத்தவர்கள், அரசு இதை எப்படிச் செம்மையாக நடத்தவேண்டும் என்று யோசனை கூறவேண்டும். எப்படி இதில் திறமையைச் செலுத்துவது என்பதையும் எடுத்துரைக்க வேண்டும்.

நாட்டுடைமையாக்கும் திட்டத்தின் அடிப்படையில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை உள்ளடக்கிய ஒரு குழுவை ஏற்படுத்த வேண்டும் என்று செய்துகொண்டிருக்கிறேன்.

முன்பு ஒருமுறை கோவையில் பேசியபோது, 'தொழில்களை மட்டும் நாட்டுடைமையாக்கினால் போதாது; தொழிலறிவு படைத்த தொழிலதிபர்களையும் நாட்டுடைமையாக்க வேண்டும்' என்று குறிப்பிட்டேன்; எனவே, தொழிலறிவு படைத்தவர் இதில் அக்கறை காட்டவேண்டும்.

'பொதுமக்களுக்கு உதவ வேண்டும்' என்ற நோக்கத்தோடுதான் தொழிலதிபர்கள் பல கல்லூரிகளைக் கட்டுகிருர்கள்; உயர்நிலைப் பள்ளிகளைத் தோற்றுவிக்கிருர்கள்; எல்லாவற்றிற்கும் உச்சக்கட்டமான அறத்தை, அரசுக்கே இப்போதுதருகிருர்கள் ! இத்துடன் அவர்களின் நல்லெண்ணத்தையும் தொழிலறிவையும் தரவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

மு. கருணாநிதி

விழாவிற்குத் தலைமைவகித்த பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது :—

"எவரையும் பழிவாங்கவோ இடுக்கண் விளைவிக்கவோ இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை; இந்த அரசு தனது கொள்கையைப் பரப்பவே இதனைச் செய்கிறது.

சென்னையிலிருந்து ஆரணிக்குப் பஸ் கட்டணம் ஏற்கனவே ரூ. 3.50-ஆக இருந்தது; இன்று முதல் அதை ரூ. 3-ஆக தனியார் துறை பஸ் முதலாளிகள் ஆக்கியிருக்கிருர்கள். ஆனல் அரசு ரூ. 2.91 வசூலிப்பதென்று முடிவு செய்திருக்கிறது.

இம்மாதிரி மக்கள் நலனுக்காகத் தனியார் துறையும் பொதுத் துறையும் போட்டிபோட்டுக்கொண்டு செயலாற்றும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை எண்ணி மகிழ்ந்து வரவேற்போமாக !

தற்போது பஸ் தொழிலில் உள்ள தனியாருக்கு இருக்கும் குறைகளைக் குறித்து அண்ணா அவர்களிடம் முறையிட்டிருக்கிருர்கள். 'தேசியமயமாக்குவது என்ற வட்டத்துக்குள் இருந்து தனியாரது குறைகளைத் தக்க முறையில் தீர்க்க என்னிடம் அண்ணா அவர்கள் ஆணையிட்டிருக்கிருர்கள். நான், கூடிய விரைவில் அவர்கள் கூட்டுகிற மாநாட்டில் கலந்து இது குறித்துக் கவனிக்க இருக்கிறேன்.

ஆரணிக்கு இந்தப் பஸ்ஸை வழியனுப்பிவைக்கும் அண்ணா அவர்கள், 'இன்பபுரி'யை நோக்கி நம்மையெல்லாம் வழி நடத்திச் செல்லவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்."

சென்னையில் மீண்டும் தீ விபத்துக்கள்

சென்னை, ஆக. 1—

இன்று மயிலாப்பூர் பகுதியில் திடீரென ஏற்பட்ட தீ விபத்துக்களால் நூறு குடிசைகளில் உள்ள 600 பேர் வீடிழந்தனர். அப்பகுதிகளிலிருந்த மக்கள் வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

வல்லீசுவரன்பேட்டையில் ஏற்பட்ட தீ விபத்தால், 18 குடிசைகள் எரிந்து சாம்பலாயின ; சுமார் ரூ. 5,000 மதிப்புள்ள பொருள் சேதமும் ஏற்பட்டுள்ளது.

பிற்பகலில் நாராயணசாமி தோட்டப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தால் 80 குடிசைகள் எரிந்து ரூ. 12,000 மதிப்புள்ள பொருள் சேதம் ஏற்பட்டுள்ளது.

தீவிபத்துக்களுக்கான காரணங்கள் தெரியவில்லை. தீ அணைப்புப் படையினர் இரு பகுதிகளிலும் தீயை அணைத்தனா.

அமைச்சர்கள் பார்வையிட்டு ஆறுதல் கூறினர்

தீ விபத்துக்கள் நடந்த இடங்களை அமைச்சர்கள் கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி ஆகியோர் பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் கூறினர்.

காவல்துறை தலைமை அதிகாரியும், பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.

பிற்பகல் திருவொற்றியூர் சன்னதித் தெருவில் உள்ள ஒரு கொட்டகை தீ விபத்துக்குள்ளாகியது; இதன் மதிப்பு ரூ. 300.

தீ யணைப்புப் படையினர், தீயை அணைத்தனர்.

தமிழுக்குச் சிறந்த...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

பதைப்போல், தமிழ் ஆசிரியர்களும் பிற பாடங்களைக் கற்பிக்கும் வாய்ப்பு இருக்கவேண்டும்" என்று நண்பர் மகாலிங்கம் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனல், ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள், தமிழையும் கற்பிக்கும் அளவுக்குத் தமிழை அறிந்திருக்க வேண்டும். ஆங்கிலம் எந்த அளவு கற்கப்படுகிறதோ அந்த அளவுக்குத் தமிழும் கற்கப்பட வேண்டும்.

கல்லூரி ஆசிரியர்களாக இருப்பவர்கள், இரு மொழிகளிலும் கட்டாயம் நல்ல புலமை பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான், ஆங்கிலத்தில் கருத்துக்களை வாங்கி, தமிழில் கொடுக்க முடியும்.

மற்ற வேலைகளுக்குச் செல்வோர், ஆங்கிலம் அந்த அளவுக்குக் கற்க வேண்டும் என்பதில்லை. கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்து ஆங்கிலம் மிகவும் இன்றியமையாதது.

தமிழின் தரம் குறைந்துவிட்டதாகவோ, முன்பிருந்த தமிழறிஞர்களைப்போல் இப்போது எவரும் இல்லை என்ருே எவரும் அஞ்சத் தேவையில்லை ; தமிழுக்கு நல்ல காலம் இப்போதுதான் பிறந்திருக்கிறது.

மூன்றே முக்கால் கோடிப் பேர்கள் இன்றைக்குத் தமிழைப் பேசுபவர்களாக—தமிழ் நூல்களைப் படிப்பவர்களாக உள்ளனர்; இந்தத் தொகை மேலும் வளருமே தவிர, குறையாது. ஆனல் எல்லோரும் தமிழ் நூல்களைப் படிக்கும் அளவுக்குச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

மூன்றே முக்கால் கோடி தமிழர்கள் இருந்தும், ஒரு தமிழ் நூலின் 5,000 பிரதிகளாவது விற்கமுடியவில்லை என்ருல், அதற்கான சூழ்நிலை உருவாக்கப்படாததுதான் காரணம். எந்தப் புத்தகமானுலும் குறைந்தது 5,000 பிரதிகளாவது விற்கும்படியான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

திருமண விழாவானுலும், விருந்து நிகழ்ச்சியானுலும், மாலை போடுவதற்குப் பதிலாக — மற்றப் பொருள்களைப் பரிசளிப்பதற்குப் பதிலாக—தமிழ் நூற்களை வாங்கி அவற்றைப் பரிசாக வழங்கும் பழக்கத்தை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் காசு கொடுத்துப் புத்தகம் வாங்கிப் படிக்க வேண்டும். இன்று ஒருவருக்குப் பரிசாக ஒரு நூலைக் கொடுத்தால் அது அவருடைய மகன், பேரன் காலம் வரையில் நினைவுப் பொருளாகவும் இருக்கும் ; பயனுள்ளதாகவும் இருக்கும்.

எனவே, தமிழ் இனி வாழும்—வளரும் ; அதற்கான சூழ்நிலைகளை—வாய்ப்பு வசதிகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிருேம் ; இந்த ஆராய்ச்சி மன்றமும் அதற்குப் பயன்படும். எல்லோரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்."

ஆராய்ச்சி மன்ற இயக்குநர் திரு. இர. பாலகிருட்டிண முதலியார் விழா முடிவில் நன்றி கூறினுர்.

எம். ஜி. ஆர். சுடப்பட்ட வழக்கு

செஷன்சு நீதிமன்றத்தில் விசாரணை

சென்னை, ஆக. 2—

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைக் கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தானும் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாக நடிகர் எம். ஆர். இராதா மீது தொடரப்பட்டுள்ள வழக்கு நேற்று சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

நீதிமன்றத்திற்குப் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களும் வந்திருந்து சாட்சியமளித்தார்.

மத்திய சிறையிலிருந்து எம். ஆர். இராதாவும் அழைத்து வரப்பட்டிருந்தார்.

மற்றும் புகைப்பட நிபுணர், கட்டிடக் கலைஞர் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

அரசுத் தரப்பில், அரசு வழக்குரைஞர் பி. ஆர். கோகுலகிருட்டினனும், அவருக்கு உதவியாளராக வழக்குரைஞர்கள் இராசமாணிக்கம், கே. ஏ. கிருட்டினசாமி, இன்ஸ்பெக்டர் தளவாய் சுந்தரம் ஆகியோரும் வந்திருந்தனர்.

எம். ஆர். இராதா தரப்பில் வழக்குரைஞர்கள் மோகன் குமாரமங்கலம், வானமாமலை, நடராசன் ரவீந்திரன் ஆகியோர் வந்திருந்தனர்.

செய்தி நிருபர்களும், பொது பொதுமக்களும் ஏராளமாகக் குழுமியிருந்தனர்.

வழக்கு விசாரணை இன்றும் தொடர்ந்து நடைபெற்றது.

நடக்க இருப்பவை

3--8--67

நிலக்கோட்டை

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு ; தலைவர் : எஸ். நடராசன் ; பேசுவோர் : சி. தமிழரசி பி.ஏ., மா. வேலன், ஆ. முனியாண்டி எம்.எல்.ஏ., பொன். முத்துராமலிங்கம் பி.ஏ.,பி.எல்., பழ. வீரப்பன், மற்றும் பலர்.

4--8--67

சென்னை 6-வது வட்டம்

அண்ணா மறுமலர்ச்சி மன்ற மூன்ரும் ஆண்டுவிழா ; இரவு 7-மணிக்கு நாராயண நாயக்கன் தெரு, 8-வது சந்தில் ; தலைவர் : ஆ. வெள்ளைச்சாமி ; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, கேரளீயன், துரைராசு, திருச்சி சௌந்தரராசன் பி.காம்., கே. குசால்தாஸ், மூ. இராமையா.

சென்னை 60-வது வட்டம்

தி. மு. க. சார்பில் நன்றியறிவிப்புக் கூட்டம்; இரவு 7 மணிக்கு, இராயப்பேட்டை, சீனிவாசபுரம் 2-வது தெருவில் ; தலைவர் : கே. எஸ். தங்கவேல் ; பேசுவோர் : அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, காஞ்சி கல்யாணசுந்தரம், சனர்த்தனம் எம்.ஏ., கோ. இளவரசு எம்.சி., சி. சுகுமாரன், மற்றும் பலர்.

திண்டுக்கல்

தி. மு. க. சார்பில் மலேசியா சென்று வந்த என்.வி. நடராசன் எம்.எல்.சி., மா. தங்கவேலர் ஆகியோருக்குப் பாராட்டு; மாலை 6-மணிக்கு வடக்கு மேட்டுராசப்பட்டியில் ; பேசுவோர் : எஸ். முத்து எம்.எல்.சி., மு. காதர்சா பி.ஏ.

இரவுப் பள்ளித் திறப்பு விழா

சென்னை 21-வது வட்டம் அண்ணா நகர் குடிசை வாழ்வோர் மன்றச் சார்பில் கண்ணகி இரவுப் பள்ளித் திறப்பு விழா; 3—8—67 மாலை 6-மணிக்கு கொருக்குப் பேட்டை மன்றக் கட்டிடத்தில் ; தலைவர்: சி.ரங்கசாமி; திறப்பாளர்: கா. வேழவேந்தன் பி.ஏ.பி.எல்., எல்.எல்.ஏ.; பேசுவோர் : து. வேணுகோபால் எம்.சி., சீத்தாராமன்.

அமைப்புச் செயலாளர்

என். வி. நடராசன்

எம்.எல்.சி. சுற்றுப்பயணம்

ஆக. 3 : கரூர் ; 4 : திண்டுக்கல் ; 5, 6 : குளித்தலைத் தொகுதி; 7 : திட்டக்குடி ; 9 : கீரனூர் (புதுக்கோட்டை); 12, 13 : மதுரை.

காங்கிரசு அமைச்சர்களின்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஆகியவைகளின் வேலை நிறுத்தத்தின்போது அளிக்கப்பட்ட சில பெர்மிட்டுகள், இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி வழங்கியிருப்பது தவிர்க்கமுடியாதவையாக இருந்திருக்கலாம்; ஆனல், அனுமதிக்கப்பட்ட 175 பெர்மிட்டுகள் அப்படியல்ல ; அவைகள் நீண்ட கால ஏற்பாட்டின்படி திட்டமிட்டவைகளாகும் ; சாதாரணச் சட்டத்தின்படியே அனுமதிக்கப்படக் கூடியவைகளும், அனுமதிக்கப்பட வேண்டியவைகளும் ஆகும்.

இந்த பஸ்கள் சாலையில் ஓடுவதற்கு, வழக்கமான—சட்டபூர்வமான நடவடிக்கைகளை ஒதுக்கிவிட்டு, அதிகாரிகளின் உத்தரவால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில், பிப்ரவரி மா[illegible]நடைசியில் வேறு எந்த வ[illegible]தன்படாததனுல், பாதுகா[illegible]ச் சட்டத்தின் உதவியுடன் அவ்வுத்தரவுகளை சட்டபூர்வமாக்கியுள்ளனர்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.